முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No.823/2024**

**Witness PW 1**

பெயர்: நடராஜன்

த/பெ.: ஜெயராம செட்டியார்

இன்று (17/02/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியும். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையில் விவரங்கள் தெரிந்து கொண்டேனா என்றால் சரிதான். வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பணம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியும் நானும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் தான், அவர் எனது நண்பர். பிரதிவாதி எனக்கு 40 ஆண்டுகளாக தெரியும். பிரதிவாதிக்கும் , எனக்கும் தாவா புரோநோட் காலத்திற்கு முன்பே கொடுக்கல், வாங்கல் உண்டு என்றால் வேறு கொடுக்கல், வாங்கல்கள் இல்லை. என்னிடம் காட்டப்படும் புரோநோட்டு 27.02.2012ம் தேதி ரூ.50,000/-த்தை பிரதிவாதி வாங்கிக்கொண்டு எனது பெயருக்கு எழுதிக்கொடுத்த புரோநோட் என்றால் அவ்வாறு இல்லை. மேற்படி ஆவணத்தின் பின்புறம் உள்ளது எனது கையொப்பம் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்த காரணத்தால் ஏற்கனவே எங்களுக்குள் ஏற்பட்ட மேற்படி 27/02/2012 தேதியிட்ட கடனுறுதிச்சீட்டை நான் இல்லை என மறுக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு பிராமிசரி நோட்டில் இரண்டு சாட்சிகள் இருப்பார்கள் என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் ஒரு சாட்சி தான் உள்ளார் என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் பிரதிவாதி எதற்காக ரூ.92,000/-த்தை வாங்கினார் என குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா புரோநோட் அச்சு புரோநோட் என்றால் சரிதான். மேற்படி புரோநோட்டில் குடும்ப செலவிற்காகவும்/ வியாபாரத்திற்காகவும்/அவசர நிமித்தமாகவும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 விவரங்களில் தேவை என்ன என்பது குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி தாவா புரோநோட்டில் வட்டி எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் உள்ள முத்திரை தாளின் மீதான கையொப்பமும், அதற்கு கீழாக உள்ள கையொப்பமும் ஒன்றிற்கு ஒன்று வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.2

ரூ.90,000/- என என்னால் தட்டச்சு செய்யப்பட்டு பேனாவால் ரூ.92,000/- என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பில் ரூ.90,000/- என குறிப்பிட்டு அனுப்பப்பட்டது என்றாலும், பின்னிட்டு வா.சா.ஆ.2 ஐ நான் திருத்திக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. நான் அனுப்பிய சட்ட அறிவிப்பிலும், நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சியத்திலும், வழக்குரையிலும் என்ன தேவை என்று குறிப்பிட்டு என்னால் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கடந்த 27.02.2012 ம் தேதி ரூ.50,000/- கடனாக என்னிடம் வாங்கினார் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் நான் பிரதிவாதியிடம் இருந்து வட்டி பாதுகாப்பிற்காக கூடுதலாக நிரப்பப்படாத வெற்று புரோநோட் ஒன்றில் கையொப்பம் பெற்று வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி முந்தையதாக சொல்லப்படும்கடனை இந்த பிரதிவாதி கடந்த 2015ம் ஆண்டு அசல் ரூ.50,000/-, வட்டி ரூ.17,500/- ஆக மொத்தம் ரூ.67,500/- என கொடுத்து தீர்த்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் நான் வட்டி 48 சதவிகிதம் வட்டி கணக்கிட்டு, வட்டி ரூ.70,000/- என்றும், அசல் ரூ.50,000/- என்றும் ஆக மொத்தம் ரூ.1,20,000/- வேண்டும் என பிரதிவாதியிடம் கேட்டேன் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் என்னால் பெறப்பட்ட ரூ.67,500/- போக மீதமுள்ள ரூ.52,500/-க்கு நான் இன்னொரு வெற்று புரோநோட்டில் பிரதிவாதியின் கையொப்பத்தை பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு என்னால் பெறப்பட்ட இரண்டு வெற்று பாண்டுகளில் ஒன்றை வைத்து அதை நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தீர்ந்து போன கடனில் உள்ள வட்டியை அசலாக குறிப்பிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு கடனை கொடுக்காத போது அசலும், வட்டியும் கேட்க இயலாது என்றால் சரியல்ல. நான் ஸ்ரீசாமுண்டீஸ்வரி நகை அடகு பிடிப்பவர் கடை நடத்தி வருகிறேன். தாவா புரோநோட் மேற்படி கடையில் வைத்து எழுதப்பட்டது என்றால் பிரதிவாதி என் கடையில் வைத்து எழுதினார். தாவா புரோநோட் எழுதும் போது யார் கூட இருந்தார்கள் என்றால் பிரதிவாதி கூட்டி வந்த செல்வம் என்பவர் இருந்தார். 13/02/2019 தேதியிட்ட சட்ட அறிவிப்பு கிடைத்தவுடன் பிரதிவாதியும் வீரபாண்டியை சார்ந்த குப்பன் என்பவரும் என்னை சந்தித்து பைசலான கடனிற்கு ஏன் சட்ட அறிக்கை அனுப்பினீர்கள் என்று கேட்டார்கள் என்றால் அவ்வாறு கேட்கவில்லை. அவ்வாறு கேட்டார் என்றாலும், நான் சட்ட நடவடிக்கைகள் எதுவும்

எடுக்கப்போகவில்லை என்று அப்போது நான் பிரதிவாதியை சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டேன் என்றாலும், எனவே தான் பிரதிவாதி எவ்வித பதில் சட்ட அறிக்கையும் எடுக்கவில்லை என்றால் அவ்வாறு பிரதிவாதி வரவில்லை. நான் சட்டத்திற்கு விரோதமாக வட்டி தொழில் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. எனது கிராமத்தில் நான் நிறைய பேருக்கு வட்டிக்கு பணம் கொடுத்து வசூல் செய்து வருகின்றேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட் ஒரு முழுமையான ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா புரோநோட்டை எழுதினார் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டின் அடிப்படையில் பிரதிவாதியால் என்னிடம் கடன் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா புரோநோட் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டிற்கு மறுபயன் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. சரியான மறுபயனுக்கு தாவா புரோநோட் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் தாவா புரோநோட் தேதியில் பிரதிவாதி கடன் பெறவில்லை என்றாலும் எனவே தாவா தள்ளுபடிக்கு உகந்தது என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> -இல்லை.

(Sd/-C.R.Gowthaman)
Principal Subordinate Judge,
Villupuram.